**செ.வெ.எண் : 419/2020** **நாள் : 31.12.2020**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் வருகின்ற 2021 சட்டமன்றத் தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் மாதிரி செயல்விளக்க (Mock Poll) பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வருகின்ற 2021 சட்டமன்றத் தேர்தலுக்காக முதற்கட்ட அனைத்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் வரப்பெற்ற நிலையில், இன்று (31.12.2020) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் காஞ்சிபுரம் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு மாதிரி செயல்விளக்க (Mock Poll) பணிகளை பார்வையிட்டார்.

**இந்நிகழ்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெறவுள்ள 2021 சட்டமன்றத் தேர்தலுக்காக காஞ்சிபுரம் தமிழ்நாடு சேமிப்பு கிடங்கில் 3,304 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், 2,341 மின்னணு கட்டுப்பாட்டு கருவிகள், 2,518 விவிபாட் கருவிகள் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பெல் நிறுவன பொறியாளர்களைக் கொண்டு முதல்நிலை சரிபார்ப்பு பணிகள் செய்து பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முறையாக இயங்குவதை தெளிவுபடுத்தும் வகையில் இன்று (31.12.2020) அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் மாதிரி வாக்குப்பதிவு செயல்விளக்கம் (Mock Poll) நடைபெற்றது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்.**